சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.ம.லெனின் அவர்களின் மனைவி திருமதி.அ.திலகம் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ப்பி2)த்துறை

அரசாணை (ப) எண்.330

நாள் 10.07.2020

சார்வரி வருடம் – ஆனி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித ந.க.எண்.4780/பஅ3/2015, நாள் 17.10.2019.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்கள், நாகப்பட்டினம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இளநிலை பயிற்சி அலுவலராகப் பணியாற்றிய போது 15.08.2014 அன்று பணியிடை மரணமடைந்த திரு.ம.லெனின் என்பவரது மனைவி திருமதி.அ.திலகம் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (பயிற்சிப்பிரிவு) அவர்களின் 21.07.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி நாகப்பட்டினம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 01.08.2016 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

2. மேலும், அரசாணை நிலை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–இல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே துறை அளவில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி பணியாளர் 01.08.2016 முற்பகல் பணியில் சேர்ந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு 01.02.2016–க்கு பின்னர் தனியர் பணிநியமனம் செய்யப்பட்டதால், தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பெற்றுத் தருமாறு அரசைக் கோரியுள்ளார்.

த.பி.பா.,

3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய தேவையில்லை என்பதால், அக்கருத்துருவை ஏற்று பணியிடை மரணமடைந்த திரு.ம.லெனின் என்பவரது மனைவி திருமதி.அ.திலகம் என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சி பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் 01.08.2016 மு.ப. முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். இதுகுறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

4. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.15478/ஜி2/2020-1, நாள் 02.07.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032. (இ) (அசல் மூலச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).

திருமதி.அ.திலகம், இளநிலை உதவியாளர் (வழி:- இயக்குநர் (மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032).

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

நகல்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை – 600 009.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை – 600 009.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ/அநமு-II) துறை, சென்னை – 600 009.

இருப்பு கோப்பு / உதிரி நகல்/சுத்த நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(கு. இராமகிருஷ்ண ராஜன்)
அரசு சார்புச் செயலாளர்

15/7/2020